பொதுப்பணி மற்றும் நெடுஞ்சாலைத்துறை அமைச்சர் எ.வ. வேலு, இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் ஆகியோர் நேற்று (22.01.2025) திருத்தணி சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில் சார்பில் ரூ.99.50 இலட்சம் செலவில் கட்டப்பட்டுள்ள தவில் மற்றும் நாதஸ்வர இசை பயிற்சிப் பள்ளியினை திறந்து வைத்தனர். உடன் திருத்தணி சட்டமன்ற உறுப்பினர் எஸ். சந்திரன், சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை முதன்மைச் செயலாளர் டாக்டர் பி.சந்தரமோகன், இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் பி.என். ஸ்ரீதர், திருவள்ளூர் மாவட்ட ஆட்சி தலைவர் டாக்டர் த.பிரபுசங்கர், மற்றும் அரசு துறை அலுவலர்கள் உள்ளனர்.

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேற்று (22.01.2025) சென்னை, ஓமந்தூரார் அரசினர் தோட்டத்தில் உள்ள தமிழ்நாடு அரசு பன்னோக்கு உயர்சிறப்பு மருத்துவமனையில், சுமார் 5000 பேர் பயன்படுத்தும் வகையில், ஒரு மணி நேரத்திற்கு 1000 லிட்டர் குடிநீர் சுத்திகரிப்பு செய்யும் கருவியினை பயன்பாட்டிற்கு கொண்டு வந்தார். இந்நிகழ்வில் தமிழ்நாடு அரசு பன்னோக்கு உயர்சிறப்பு மருத்துவமனை இயக்குநர் மரு.மணி, ஒருங்கிணைப்பு அலுவலர் மரு.ஆனந்தகுமார் ஆகியோர் உடனிருந்தனர்.

ஒருநாள் பயிற்சி வகுப்பு "தொழில்முனைவோருக்கான ChatGPT"

சென்னை, ஜன.23-

தமிழகஅரசின்தொழில் முனைவோர்மேம்பாடுமற்றும்புத்தாக்கநிறுவனத்தின் ஒருநாள்பயிற்சிவகுப்பு "தொழில்முனைவோருக்கானChatGPT"பயிற்சிவரும் 25.01.2025 தேதிநடைபெற உள்ளது.பயிற்சிநடைபெறும்இடம்: EDIITN வளாகம் சென்னை - 600 032.

தொழில்முனைவோர், சிறுமற்றும்நடுத்தரவணிகஉரிமையாளர்கள்மற்றும்ஸ்டார்ட்அப்நிறுவுநர்களுக்கு, ChatGPTஐபயன்படுத்திவணிகசெயல்பாடுகளைஎளிமைப்படுத்தவும், திறன்மேம்படுத்தவும், செலவுகளைகுறைக்கவும்உதவும்தகவல்கள்மற்றும்நடைமுறைபயிற்சிகளைஇந்தபயிற்சிவகுப்புவழங்கும்.

பயிற்சியில்இடம்பெறும் தலைப்புகள்:

ChatGPTஅறிமுகம்மற்றும்ப்ராம்ப்ட்நுணுக்கங்கள்:ChatGPTஇன்திறன்கள்மற்றும்வணிகதேவைகளுக்கேற்பபொருத்தமானப்ராம்ப்ட்டுகளைஎழுதும்திறன்களைகற்றுக்கொள்ளுங்கள்.

தெளிவானஇலக்குநிர்ணயம்:ChatGPTஇன்உதவியுடன்உங்கள்நோக்கம்மற்றும்இலக்குகளைசரியானவழியில்அமைக்கவும், செயல்படுத்தவும்கற்றுக்கொள்ளுங்கள்.

மார்க்கெட்டிங்மற்றும்பிராண்டிங்யுக்திகள்:ChatGPTஐபயன்படுத்திபுதுமையானமார்க்கெட்டிங்மற்றும்சமூகஊடகதிட்டமிடல்உத்திகளைகற்றுக்கொள்ளுங்கள்.

கான்டென்ட்உருவாக்கம்மற்றும்வாடிக்கையாளர்ஈர்ப்பு:தாக்கம்செய்கிறகான்டென்ட்உருவாக்கவும், வாடிக்கையாளர்களுடன்உரையாடலைமேம்படுத்தவும் AI கருவிகளைபயன்படுத்தகற்றுக்கொள்ளுங்கள்.

செயல்திறன்கண்காணிப்புமற்றும்அளவீட்டுஉத்திகள்:வணிகசெயல்திறனைதுல்லியமாககண்காணிக்கவும், ChatGPTஐ பயன்படுத்திபகுப்பாய்வுசெய்யவும்கற்றுக்கொள்ளுங்கள்.

நேரடிசிக்கல்தீர்வு:இடுகையாளர்எதிர்கொள்ளும்தொழில்முனைப்புசவால்களைஉள்ளடக்கியஒருங்கிணைந்தஅமர்வில், ChatGPTமூலம்தீர்வுகளைகண்டுபிடிக்கவும்.

பங்கேற்பாளர்கள் 100க்குமேற்பட்டசெயல்திறன்கொண்டChatGPTப்ராம்ப்ட்டுகளுடன்ஒருபிரத்யேகமின்புத்தகத்தையும், அன்றாடப்ராம்ப்ட்வழிகாட்டுதல்கள்மற்றும்புதுப்பிப்புகளுக்கானஒற்றுமையானவாட்ஸ்அப்சமூகஅணுகலையும்பெறுவார்கள்.

இப்பயிற்சிபற்றியகூடுதல்விவரங்களைபெறவிரும்புவோர்www.editn.inஎன்றவலைத்தளத்தில்தெரிந்துகொள்ளலாம்.

மேலும்விவரங்களுக்கு அலுவலகவேலைநாட்களில் (திங்கள்முதல்வெள்ளிவரை) காலை 10 மணிமுதல் மாலை 5.45 மணிவரைதொடர்புகொள்ளவேண்டியமுகவரிமற்றும் தொலைபேசி / கைபேசி எண்கள்கொடுக்கப்பட்டுள்ளது:90806 09808/ 98416 93060 / 96771 52265/

அரசுசான்றிதழ்வழங்கப்படும்

முன்பதிவு அவசியம்:www.editn.in

சென்னையிலுள்ள 19 மண்டலங்களில்

ஜன.25 அன்று பொது விநியோகத் திட்ட மக்கள் குறைதீர் முகாம்!

சென்னை, ஜன.23-

பொது விநியோகத் திட்டத்தின் பயன்களை குடிமக்கள் எளிதில் பெறும் வகையில் தமிழ்நாடு முழுவதும் ஒவ்வொரு வட்டத்திலும் மக்கள் குறைதீர் முகாம் ஒவ்வொரு மாதமும் நடத்தப்படும் என அரசு அறிவித்துள்ளது. அதன்படி ஜனவரி 2025 மாதத்திற்கான மாதாந்திர பொது விநியோகத் திட்ட மக்கள் குறைதீர் முகாம் சென்னையில் உள்ள உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறையின் 19 மண்டல உதவி ஆணையாளர் அலுவலகங்களில் 25.01.2025 அன்று காலை 10.00 மணி முதல் பிற்பகல் 1.00 மணி வரை நடைபெறவுள்ளது.

குடும்ப அட்டைகளில் பெயர் சேர்த்தல், பெயர் நீக்கம், முகவரி மாற்றம், கைபேசி எண் பதிவு / மாற்றம் செய்தல் உள்ளிட்ட பொது விநியோகத் திட்டம் தொடர்பான சேவைகள் மேற்கொள்ளப்படும். மேலும், நியாய விலைக் கடைகளில் பொருள் பெற நேரில் வருகை தர இயலாத மூத்த குடிமக்கள் உள்ளிட்டோருக்கு அங்கீகாரச் சான்று வழங்கப்படும். மேலும், பொது விநியோகக் கடைகளின் செயல்பாடுகள், தனியார் சந்தையில் விற்கப்படும் பொருட்கள் அல்லது சேவைகளில் குறைபாடுகள் குறித்த புகார்கள் ஏதேனும் இருப்பின் அவற்றை பொதுமக்கள் இம்முகாமில் தெரிவித்தால் குறைகளை விரைந்து தீர்வு செய்ய உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

சென்னையிலுள்ள 19 மண்டல அலுவலகப் பகுதிகளில் உள்ள குடும்ப அட்டைதாரர்கள் இச்சேவையினை பயன்படுத்திக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள் என்று தமிழ்நாடு அரசு வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

சென்னை மெட்ரோ ரயில் பணிகள் :

மாதவரத்தில் கழிவு நீர் நிலையங்கள் செயல்படாது!

சென்னை குடிநீர் வாரியம் அறிவிப்பு!

சென்னை, ஜன. 23-

சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம் (CMRL) மண்டலம் - 3 (மாதவரம்) 200 அடி சாலையில் மாதவரம் ரவுண்டனா பாரத் பெட்ரோலியம் பங்க் அருகில் மற்றும் P2C3 மூலக்கடை சந்திப்பில் கழிவுநீர் உந்துகுழாய் இணைக்கும் பணிகள் மேற்கொள்வதால் 23.01.2025 அன்று காலை 09.00 மணி முதல் 24.01.2025 இரவு 10.00 மணி வரை (37 மணி நேரம்) மண்டலம் - 3 (மாதவரம்), மண்டலம் - 6 (திரு.வி.க நகர்), மண்டலம்7 (அம்பத்தூர்) மற்றும் மண்டலம் 8 (அண்ணாநகர்) க்குட்பட்ட சில பகுதிகளில் கீழ்கண்ட கழிவுநீர் உந்துநிலையங்கள் தற்காலிகமாக செயல்படாது.

எனவே, மாதவரம், திரு.வி.க.நகர், அம்பத்தூர், அண்ணா நகர் மண்டலங்களுக்குட்பட்ட இடங்களில் கழிவுநீர் தொடர்பான புகார்களுக்கு கீழ்க்காணும் பகுதி அலுவலர்களை தொடர்பு கொள்ளவும்.

மண்டலம் பகுதிப் பொறியாளர் கைபேசி எண்கள் கழிவுநீர் உந்து நிலையங்கள்

மண்டலம்3 (மாதவரம்) 8144930903

கடப்பா சாலை உயர் மின் அழுத்த தொடர் கழிவுநீர் உந்து நிலையம், மதனகுப்பம் கழிவுநீர் உந்து நிலையம், ராஜீவ் காந்தி நகர் கழிவுநீர் உந்து நிலையம், தாங்கல் கரை கழிவுநீர் உந்து நிலையம், புத்தகரம் கழிவுநீர் உந்து நிலையம், பத்மாவதி கழிவுநீர் உந்து நிலையம், வீனஸ் நகர் கழிவுநீர் உந்து நிலையம்.

மண்டலம் - 6 (திரு.வி.க நகர்) கைபேசி எண். 8144930906

வில்லிவாக்கம் செக்டார் 'ஏ' கழிவுநீர் உந்து நிலையம்.

மண்டலம்7 (அம்பத்தூர்) கைபேசி எண். 8144930907

கொரட்டூர் உயர் மின் அழுத்த தொடர் கழிவுநீர் உந்து நிலையம், லெனின் உயர் மின் அழுத்த தொடர் கழிவுநீர் உந்து நிலையம், சங்கம் கழிவுநீர் உந்து நிலையம், அய்யப்பாக்கம் கழிவுநீர் உந்து நிலையம், வி.ஓ.சி. நகர் கழிவுநீர் உந்து நிலையம், நேரு நகர் கழிவுநீர் உந்து நிலையம், தென்றல் நகர் கழிவுநீர் உந்து நிலையம், கள்ளிக்குப்பம் கழிவுநீர் உந்து நிலையம், கருப்பன் குளம் கழிவுநீர் உந்து நிலையம், கருக்கு கழிவுநீர் உந்து நிலையம், பள்ளம் கழிவுநீர் உந்து நிலையம், சிட்கோ கழிவுநீர் உந்து நிலையம், கச்சனகுப்பம் கழிவுநீர் உந்து நிலையம், கிழக்கு அவென்யூ கழிவுநீர் உந்து நிலையம், இளங்கோ நகர் கழிவுநீர் உந்து நிலையம்.

மண்டலம் 8 (அண்ணாநகர்) கைபேசி எண். 8144930908

வில்லிவாக்கம் லகுன் உயர் மின் அழுத்த தொடர் கழிவுநீர் உந்து நிலையம், வில்லிவாக்கம் பேஸ்1 சிட்கோ, வில்லிவாக்கம் பேஸ்2 அகத்தியர் நகர் கழிவுநீர் உந்து நிலையம், வடக்கு ஜகந்நாதன் நகர் கழிவுநீர் உந்து நிலையம், வில்லிவாக்கம் செக்டார் பி கழிவுநீர் உந்து நிலையம்.

இவ்வாறு சென்னை குடிநீர் வாரியம் அறிவித்துள்ளது.

கிருஷ்ணகிரியில் மாவட்டச் செயலாளர் தே.மதியழகன் ஏற்பாட்டில்

மாற்றுக் கட்சியினர் 1300 பேர் கழகத்தில் இணைந்தனர்!

அமைச்சர் அர.சக்கரபாணி முன்னிலையில்!

கிருஷ்ணகிரி, ஜன.23-

கிருஷ்ணகிரியில், அ.தி.மு.க., நாதக பா.ஜ.க. மற்றும் பா.ம.க. நிர்வாகிகள் உள்ளிட்ட பல்வேறு கட்சிகளை சேர்ந்த 1300பேர் தி.மு.க.வில் இணையும் நிகழ்ச்சி நடந்தது. நிகழ்ச்சிக்கு கிழக்கு மாவட்ட தி.மு.க. செயலாளர் மதியழகன் எம்.எல்.ஏ. ஏற்பாட்டில் நடைபெற்ற இணைப்பு விழாவில் உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சரும் மாவட்ட பொறுப்பு அமைச்சர் அர.சக்கரபாணி முன்னிலையில், நாம் தமிழர் கட்சி செய்தி தொடர்பாளர் கவுதமன், கிழக்கு ஒன்றிய செயலாளர் சூர்யா, பர்கூர் சட்டமன்ற தொகுதி தலைவர் சக்திவேல் மற்றும் காவேரிப்பட்டணம் நிர்வாகிகள் உள்ளிட்ட 1,000 பேர் இணைந்தனர். அதே போல அ.தி.மு.க. மீன வரணி ஊத்தங்கரை ஒன்றிய செயலாளர் ரத்னம் மற்றும் பாஜ மண்டல பொது செயலாளர் சங்கீதா தலைமையில், 300க்கும் மேற்பட்டோர் தி.மு.க.வில் இணைந்தனர்.

அவர்களை வரவேற்று அமைச்சர் சக்கரபாணி பேசுகையில், 'பெண்ணுரிமைக்காக போராடிய பெரியாரை, நாதக ஒருங்கிணைப்பாளர் சீமான், யாருக்காகவோ விமர்சித்து பேசி வருகிறார். அதனால் தான் ஆயிரக்கணக்கான தம்பிகள். இன்று தி.மு.க.வில் இணைந்துள்ளீர்கள். தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் உருவாக்கிய இந்தியா கூட்டணி. நாடாளுமன்ற தேர்தலில் தமிழகத்தில் போட்டியிட்ட அனைத்து தொகுதிகளிலும் வென்றது. வரும் சட்டசபை தேர்தலில், 200 தொகுதிகள் என்ற வெற்றி இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. நாளுக்கு நாள் இளைஞர்கள் வருகையால் அது கண்டிப்பாக உயரும். நீங்கள் அனைவரும் கடுமையாக உழைப்பீர்கள் என்ற நம்பிக்கை உள்ளது என்றார்.

இந்த கூட்டத்தில், அவைத் தலைவர் நாகராஜ்,

மாவட்ட துணைச் செயலாளர்கள் கோவிந்தசாமி, சாவித்திரி கடலரசுமூர்த்தி, சந்திரன், பொருளாளர் கதிரவன். தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் செந்தில், கிருபாகரன், பொதுக்குழு உறுப்பினர்கள் அஸ்லாம். பாலன், நாகராசன், சித்ரா சந்திரசேகர், கோதண்டன், மாநில மகளிர் அணி பிரச்சார குழு செயலாளர் டாக்டர் மாலதி நாராயணசாமி, முன்னாள் எம்.எல்.ஏ.க்கள் கிருஷ்ணமூர்த்தி, நரசிம்மன், கிருஷ்ணகிரி நகர கழக செயலாளர் நவாப் , ஒன்றிய செயலாளர்கள் கோவிந்தன், தனசேகரன், சுப்பிரமணி, மகேந்திரன், ராஜேந்திரன், அறிஞர், சாந்தமூர்த்தி, எக்கூர் செல்வம், குமரேசன், ரஜினி செல்வம், குண.வசந்தரசு பேரூர் கழக செயலாளர்கள் தம்பிதுரை வெங்கட்டப்பன் , பேரூர் கழக பொறுப்பாளர்கள், சாஜித் , பார்த்திபன் மற்றும் அன்பரசன் உள்ளிட்ட மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள், தலைவர்கள், துணைத் தலைவர்கள் துணை அமைப்பாளர்கள் ஒன்றிய, நகர, பேரூர், கழக நிர்வாகிகள் முன்னாள் உள்ளாட்சி பிரதிநிதிகள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

செல்லசேது.ரவிக்குமார் வரவேற்புரை!

கொள்ளிடம் மேற்கு ஒன்றிய பி.எல்.ஏ.2, பி.எல்.சி. கலந்தாய்வு கூட்டம்!

நிவேதா எம்.முருகன் சிறப்புரை! எம்.பன்னீர்செல்வம், எம்.தினேஷ்குமார் பங்கேற்பு!

மயிலாடுதுறை, ஜன.23-

மயிலாடுதுறை மாவட்டம் கொள்ளிடம் மேற்கு ஒன்றிய தி.மு.க. பாக நிலை முகவர்கள் (பி.எல்.ஏ.2) மற்றும் பூத்கமிட்டி உறுப்பினர்கள் (பி.எல்.சி) கலந்தாய்வு கூட்டம் கொள்ளிடத்தில் நடைபெற்றது. கூட்டத்திற்கு சீர்காழி சட்ட மன்ற உறுப்பினர் எம்.பன்னீர் செல்வம் முன்னிலை வகித்தார். கொள்ளிடம் மேற்கு ஒன்றியச் செயலாளர் செல்லசேது.ரவிக்குமார் வரவேற்றார்.

கூட்டத்திற்கு மயிலாடுதுறை மாவட்டக் கழகச் செயலாளரும், பூம்புகார் சட்ட மன்ற உறுப்பினருமான நிவேதா எம்.முருகன் தலைமை தாங்கி சிறப்புரையாற்றினார்.

கூட்டத்தில் கழக வழக்கறிஞர் அணி துண செயலாளரும், சீர்காழி சட்ட மன்ற தொகுதி பார்வையாளர் எம்.தினேஷ்குமார் கருத்துரை வழங்கினார். கூட்டத்தில் மாவட்டக் கழக அவைத்தலைவர் கே.ஜி.சீனிவாசன், ஒன்றியக் கழகச் செயலாளர்கள் ஏ.ஜி.ஜெ.பிரபாகர், பஞ்சுகுமார்,

சீர்காழி நகரக் கழகச் செயலாளர் ம.சுப்பராயன், பொதுக்குழு உறுப்பினர் எம்.பி.கென்னடி, முன்னாள் ஒன்றியக் குழு தலைவர் ஜெயபிரகாஷ், மாவட்ட தொண்டர் அணி அமைப்பாளர் முத்து குபேந்திரன் மற்றும் ஒன்றிய, கிளை கழக நிர்வாகிகள், கழக பாக நிலை முகவர்கள் (பி.எல்.ஏ.2) மற்றும் பூத்கமிட்டி உறுப்பினர்கள் (பி.எல்.சி) கலந்து கொண்டனர்.

விழுப்புரம் தெற்கு மாவட்டக் கழக

ஆதிதிராவிடர் நலக்குழு அறிமுக ஆலோசனைக் கூட்டம்!

விழுப்புரம், ஜன. 23 -

வனத்துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி அவர்களின் ஆலோசனைக் கிணங்க விழுப்புரம் தெற்கு மாவட்ட ஒன்றிய, நகர, பேரூர் ஆதிதிராவிடர் நலக் குழு அணி அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள் அறிமுக ஆலோசனைக்கூட்டம்

மாவட்ட பொறுப்பாளர் டாக்டர்.பொன். கௌதமசிகாமணி தலைமையில் நடைபெறுகிறது. மாவட்ட அமைப்பாளர் செல்வ பிரேம் அறிவித்துள்ளார்.

அவரது அறிவிப்பு வருமாறு: -

வனத்துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி அவர்களின் ஆலோசனைக் கிணங்க விழுப்புரம் தெற்கு மாவட்ட ஒன்றிய, நகர, பேரூர் ஆதிதிராவிடர் நலக் குழு அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள் அறிமுக ஆலோசனைக் கூட்டம் மாவட்ட பொறுப்பாளர் டாக்டர். பொன். கௌதமசிகாமணி அவர்கள் தலைமையில் இன்று (23.01.2025- வியாழக்கிழமை) மாலை 4.00 மணியளவில் அளவில் விழுப்புரம் கலைஞர் அறிவாலயம் தளபதி அரங்கத்தில் மாநில ஆதிதிராவிடர் நலக்குழு இணைச் செயலாளர் செ.புஷ்ப ராஜ் முன்னிலையில் நடைபெறுகிறது.

தலைவர் வேலு ஜி, துணைத் தலைவர் இருசப்பன், மாவட்ட துணை அமைப்பாளர்கள் ஓம்சிவ சக்திவேல், எம்.ஆர்.இராஜிவ்காந்தி, தர்மலிங்கம் ஏழுமலை, சூப்பர் பழனி, திராவிட மணி உள்ளிட்ட ஒன்றிய, நகர, பேரூர் ஆதிதிராவிடர் நலக்குழு அணி அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள் தவறாமல் கலந்து கொள்ள வேண்டும் என கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு ஆதிதிராவிடர் நலக்குழு அணி செல்வ. பிரேம், விழுப்புரம் தெற்கு மாவட்ட அமைப்பாளர் தெரிவித்துள்ளார்.

சேலம் கிழக்கு மாவட்டச் செயலாளர் எஸ்.ஆர்.சிவலிங்கம் ஆலோசனைப்படி தலைவாசல் மத்திய ஒன்றிய தி.மு.க. சார்பில் தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பிறந்த நாள் விழா மற்றும் கழக அரசின் சாதனைகள் விளக்க பொதுக்கூட்டம் நடைபெற்றது. கூட்டத்திற்கு மாவட்ட பிரதிநிதி தேவேந்திரன் வரவேற்புரையாற்றினார். ஒன்றிய செயலாளர் சாத்தப்பாடி மணி (எ) க. பழனிச்சாமி தலைமை தாங்கினார். கூட்டத்தில் மாவட்ட துணை செயலாளர் சின்னதுரை, குணசேகரன், வடக்கு ஒன்றிய செயலாளர் பாலமுருகன், முன்னாள் ஒன்றிய செயலாளர்கள் லட்சுமணன், ஜெயபாலன், தலைமைக் கழகப் பேச்சாளர் அத்திப்பட்டு சாம்ராஜ், சார்பு அணி நிர்வாகிகள் பரமசிவம், கலியபெருமாள், கண்ணுசாமி, கருப்பையா, கிருஷ்ணன், அழகுவேல், தமிழ்ச்செல்வி, ரமேஷ், பாஸ்கரன், காசிலிங்கம், பொன்னுசாமி, பாலகிருஷ்ணன், அபிராமி சேட்டு, மாய கிருஷ்ணன் மற்றும் ஒன்றிய நிர்வாகிகள் சார்பு அணி நிர்வாகிகள், கழக முன்னோடிகள் கலந்து கொண்டனர்.

கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி - அமைச்சர் கோவி.செழியன் -- சூர்யா வெற்றிகொண்டான் உரையாற்றுகின்றனர்.

தஞ்சை வடக்கு மாவட்ட தி.மு.க. மாணவர் அணி சார்பில் வீரவணக்க நாள் பொதுக்கூட்டம்!

கழகத் தோழர்கள் திரளாக கலந்துகொள்ள மாவட்டச் செயலாளர் சு.கல்யாணசுந்தரம் எம்.பி. அறிக்கை!

தஞ்சாவூர், ஜன.23-

கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் அறிவிப்பினைஏற்று தஞ்சை வடக்கு மாவட்ட மாணவர் அணி சார்பில் மொழிப்போர்த் தியாகிகள் வீரவணக்க நாள் கூட்டம் கும்பகோணத்தில் நடைபெற உள்ளது. இதில் கழகத் தோழர்கள் திரளாக கலந்துகொள்ள வேண்டுமாய் மாவட்டச் செயலாளர் சு.கல்யாண சுந்தரம் எம்.பி, அறிக்கை வெளியிட்டுள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு :

இந்தி திணிப்பை எதிர்த்து உயிர்நீத்த மொழிப்போர்த் தியாகிகளை நினைவு கூர்ந்து பெருமைபடுத்தும் விதமான திராவிட முன்னேற்றக் கழகம் வருடா, வருடம் ஜனவரி 25 ஆம் தேதி மொழிப்போர் தியாகிகள் வீரவணக்க நாள் பொதுக்கூட்டங்களை மாணவர் அணியின் சார்பில் நடத்தி வருகிறது.

அதனைத் தொடர்ந்து வருகின்ற 25.01.2025 மாலை 06.00 மணியளவில் கும்பகோணம் மார்னிங் ஸ்டார் பள்ளி அருகில் தஞ்சை வடக்கு மாவட்ட தி.மு.க மாணவர் அணி சார்பில் மாபெரும் வீரவணக்க நாள் பொதுக்கூட்டம் நடைபெற உள்ளது.

இப்பொதுக்கூட்டத்தில் கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, உயர் கல்வித்துறை அமைச்சர் முனைவர் கோவி.செழியன், கழக சட்டத்துறை இணைச் செயலாளர் சூர்யா வெற்றிக்கொண்டான் ஆகியோர் வீரவணக்க உரையாற்று கின்றனர்.

அதுசமயம் இக்கூட்டத்தில் முன்னாள் இந்நாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், மாநில, மாவட்டக் கழக நிர்வாகிகள், மாநகர, ஒன்றிய, பகுதி மற்றும் பேரூர் செயலாளர்கள், நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், கழக பிரதிநிதிகள், முன்னாள், இந்நாள் உள்ளாட்சி பிரதிநிதிகள், மாவட்ட சார்பு அணிகளின் நிர்வாகிகள், கழக முன்னோடிகள் தவறாது கலந்து கொள்ள கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு தஞ்சை வடக்கு மாவட்டக் கழகச் செயலாளர் சு.கல்யாண சுந்தரம் எம்.பி. அறிக்கை வெளியிட்டுள்ளார்.